| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதி அறிக்கை தாக்கல்** | : | 05.06.2023 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 17.07.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 22.08.2025 | **விசாரணை காலம்** | : | 10 மாதங்கள் 26 நாட்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1,

**2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 17-ம் தேதி, வெள்ளிக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 442/2025**

**CNR No. TNSA18-000666-2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், நங்கவள்ளி காவல் நிலைய **குற்ற எண்.15/2023 பிரிவுகள் 294(b), 323, 324, 326 of IPC.** **...புகார்தாரர்**

**-எதிர்-**

1) தங்கம் (63/2025) த/பெ.கருப்பண்ணன், கரட்டுப்பட்டி, நங்கவள்ளி, மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.

2) ராஜேஷ் (33/2025) த/பெ.தங்கம், கரட்டுப்பட்டி,நங்கவள்ளி, மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.

**...எதிரிகள்**

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் **திருமதி.V.அனுராதா** அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. R.பூபதி** அவர்களும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலனை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**<u>வழக்கு விசாரணை விவரங்கள்</u>**

( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021-ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் | : | 1, 2 எதிரிகள் இருவரும் 25.01.2023ம் கைது |

<table>
<tr><td></td><td>இருந்த காலம்</td><td></td><td colspan="3">செய்யப்பட்டு அன்றே காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.</td></tr>
<tr><td>ii.</td><td>புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி</td><td>:</td><td colspan="3">05.06.2023</td></tr>
<tr><td>iii.</td><td>வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி</td><td>:</td><td colspan="3">பொருந்தாது</td></tr>
<tr><td>iv.</td><td>குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி<br>(பொருந்துவதை குறிப்பிடவும்)</td><td>:</td><td colspan="3">18.06.2026</td></tr>
<tr><td>v.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட</td><td>:</td><td colspan="3">1) MP.1/2026 Date.18.06.2026 Advance Hearing petition allowed.<br>2) MP.2/2026 Date.18.06.2026 Surrender petition allowed.<br>3) MP.3/2026 Date.18.06.2026 Petition u/s.72(2) BNSS allowed.<br>4) MP.4/2026 Date.23.06.2026 Petition u/s.359(I) BNSS allowed.<br>5) MP.6/2026 Date.06.07.2026 Petition Additional Witness allowed.</td></tr>
<tr><td>vi.</td><td rowspan="4">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம்</td><td>:</td><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td></td><td></td><td>அ.சா.1</td><td>23.06.2026</td><td>--</td></tr>
<tr><td></td><td></td><td>அ.சா.2</td><td>23.06.2026</td><td>--</td></tr>
<tr><td></td><td></td><td>அ.சா.3</td><td>23.06.2026</td><td>--</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>அ.சா.4</td><td>02.07.2026</td><td>--</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>அ.சா.5</td><td>02.07.2026</td><td>--</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>அ.சா.6</td><td>06.07.2026</td><td>06.07.2026<br>15.07.2026</td></tr>
<tr><td>vii.</td><td>B.N.S.S பிரிவு 351(1)(b)–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி</td><td>:</td><td colspan="3">08.07.2026</td></tr>
</table>



N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்
17.07.2026

| | | | |
|---|---|---|---|
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | – |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை |

இந்த வழக்கில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சரகம் கரட்டுப்பட்டியில் வசித்து வரும் சாட்சி–1 ராஜேந்திரன் குடும்பத்திற்கும் அவரது தம்பி தங்கம் குடும்பத்திற்கும் ஏற்கனவே காட்டு பிரச்சனை சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு அவர்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 12.01.2023ம் தேதி இரவு 8.30 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரர் சாட்சி–1 ராஜேந்திரன் கரட்டுப்பட்டியில் உள்ள அவரது காட்டில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த போது, அங்கு வந்த 1ஆம் எதிரி தங்கம், 2ம் எதிரி ராஜேஷ் இருவரும் ராஜேந்திரனை பார்த்து ஏண்டா கண்டார ஓலி தேவிடியா பையா நீ மட்டும் ரொம்ப நேரம் காட்டிற்கு தண்ணீர் பாய்ச்சுவியா என திட்டியும், மேலும் சாட்சி–2 பழனியம்மாளை 2ஆம் எதிரி ராஜேஷ் போடி தேவிடியா என கெட்ட வார்த்தையால் திட்டியும், மேலும் சாட்சி–3 கிருஷ்ணமூர்த்தியை 1ஆம் எதிரி தங்கம் போடா தேவிடியா பையா என பொது இடத்தில் திட்டியும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1ஆம் எதிரி தங்கம் இரும்பு ராடை எடுத்து வந்து சாட்சி–1 ராஜேந்திரனின் இடது தோள்பட்டையில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 2ஆம் எதிரி ராஜேஷ் கத்தியால் சாட்சி– 1ராஜேந்திரனின் வலதுகாதில் தாக்கியும், அதை தடுக்க

வந்த சாட்சி–3 கிருஷ்ணமூர்த்தியை 1ஆம் எதிரி தங்கம் சாட்சி–3ன் இடதுகை மணிக்கட்டில் கடித்தும், 2ஆம் எதிரி ராஜேஸ் இரும்பு ராடால் சாட்சி–3 கிருஷ்ணமூர்த்தியின் வலது கண் அருகே தாக்கி சாட்சி 1, 2க்கு சொற்ப காயங்களை ஏற்படுத்தியும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 2ஆம் எதிரி ராஜேஷ் சாட்சி–2 பழனியம்மாவை காலால் வயிற்றில் உதைத்து சாட்சி–2க்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளீர்கள். மேற்படி சம்பவத்தில் இந்த வழக்கின் எதிரிகள் மூர்த்தி, விஜயன், மணி ஆகியோர் **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 324, 326** ஆகியவற்றின் கீழ் குற்ற செயல்கள் செய்துள்ளதாக **நங்கவள்ளி காவல் நிலைய உதவி ஆய்வாளர் ராமசாமி** என்பவர் கடந்த 2025 **ஆம் வருடம் ஜுன் மாதம் 05 ஆம் தேதி** இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட குற்ற வழக்கு இதுவாகும்.

1. இந்த வழக்கில் கடந்த **22.08.2025–ம்** தேதி, எதிரிகளுக்கு எதிரான குற்றங்கள் புலன்கொள்ளப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிகளுக்கு 2023**–ம் வருடத்திய பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 230–ன் படி** வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கடந்த **02.01.2026ம்** தேதி இலவசமாக வழங்கப்பட்டது.

2. அதன் பின்னர் கடந்த **18.06.2026** தேதி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மூர்த்தி, விஜயன், மணி ஆகியோர் **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 324, 326 ன்**

**படியும்,** குற்றச்செயல்களை செய்துள்ளார்கள் என்று அனுமானிக்க தகுந்த முகாந்திரங்கள் உள்ளதாக கருதி, கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு படித்துக் காட்டி, விளக்கி கூறி, வினவிய போது, தான் குற்றவாளிகள் அல்ல எனவும், வழக்கை விசாரிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

3. ஆகவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

4. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விபரம்:**

   a) **பாதிக்கப்பட்ட நபர் சாட்சியம்:** இந்த வழக்கில் **அ.சா.1 ராஜேந்திரன்** கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தன்னுடைய தம்பியுடன் வாய் தகராறு ஏற்பட்டது என்றும், ஆனால் தற்போது தானும் ஆஜர் எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றும், தாங்கள் சமாதானமாக சென்றுவிட்டதால் மற்ற விவரங்களை தெரிவிக்க தனக்கு விருப்பம் இல்லை என்றும், கூட்டத்தில் யார் அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது, புகாரில் உள்ள கைரேகை தன்னுடையது தான். அதிலுள்ள விவரம் தனக்கு தெரியாது. என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

   b) **பாதிக்கப்பட்ட நபர்கள் சாட்சியம்:** இந்த வழக்கு சம்பவத்தை நேரில்

பார்த்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட, மேற்படி அ.சா.2 பழனியம்மாள், அ.சா.3 கிருஷ்ணமூர்த்தி, அ.சா.4 சுதாகர், அ.சா.5 பிரபு என்பவர்கள் வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

c) **மருத்துவ சிகிச்சை மற்றும் ஆவணங்கள்:** மேற்படி சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1 ராஜேந்திரன் என்பவர் ஓமலூர் அரசு மருத்துவமனையில் 19.01.2023 ம் தேதி சிகிச்சை பெற்று சிகிச்சை முடிந்துவீடு திரும்பியுள்ளார். மேற்படி ராஜேந்திரன் என்பவருக்கு ஏற்பட்ட தோள்பட்டையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காயம் கொடுங்காயம் என்று **அ.சா.ஆ.12 காயச் சான்றிதழில்** குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ராஜேந்திரன் சிகிச்சையில் இருக்கும் போது நங்கவள்ளி **காவல் நிலைய தலைமை காவலர் கோபி** என்பவர் அவரை விசாரித்து **அ.சா.ஆ.2** புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

d) மேலும் மேற்படி சம்பவத்தில் மற்றொரு காயம் பட்ட நபரான கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்று அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் **அ.சா.ஆ.9 காயச் சான்றிதழ்** வழங்கி உள்ளார்.

e) **முதல் தகவல் அறிக்கை:** அதன் பிறகு காவல்நிலையம் வந்து அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி **நங்கவள்ளி காவல் நிலைய உதவி ஆய்வாளர் ராமசாமி நங்கவள்ளி காவல் நிலைய குற்ற**

**எண்.** 15/2023 என்ற எண்ணில் **இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள்** 294(b), 323, 324, 506(1) ஆகியவற்றின் கீழ் **அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்துள்ளார்.

f) **சம்பவயிட விசாரணை:** அதன்பின்னிட்டு வழக்கை புலன் விசாரணை எடுத்துக் கொண்ட **நங்கவள்ளி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மாதேஷ்** சம்பவ இடம் சென்று, சாட்சிகளான **சுதாகர் மற்றும் ரமேஷ்** ஆகிய இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, **அ.சா.ஆ.4 பார்வை மகஜர்** மற்றும் **அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம்** தயார் செய்துள்ளார். மேலும் சம்பவயிட சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

g) **இறுதியறிக்கை:** மேலும் இந்த வழக்கின் புலன் விசாரணை அலுவலர் கடந்த 19.08.2020–ஆம் தேதி தனது புலன் விசாரணை முடித்து, இந்த வழக்கில் அ.சா.1 ராஜேந்திரன் என்பருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டதன் அடிப்படையில், **அ.சா.ஆ.13 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை** தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 05.06.2023–ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக **இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள்** 294(b), 323, 324, 326 ஆகியவற்றின் கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

5. மேற்படி அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னர், கடந்த 08.07.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில், **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம்**

**பிரிவு 351(1)(b)–ன் படி** எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து, படித்துக்காட்டி விளக்கிக் கூறி கேள்வி கேட்ட பொழுது, அவற்றை பொய்சாட்சி என மறுத்து, அவரது தரப்பில் சாட்சி உள்ளது என தெரிவித்தார்கள். ஆகவே எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை கடந்த **09.07.2026**ம் தேதி முடிக்கப்பட்டு எதிரிகள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

6. **இந்த வழக்கில் தீர்வளிக்கப்பட வேண்டிய எழுவினா யாதெனில்? அரசுத்தரப்பு, எதிரிகளுக்கு எதிராக சுமத்தியுள்ள குற்றச்சாட்டை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதா? என்பதாகும்.**

7. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு எதிரிகள் தரப்பில் எந்தவித சாட்சியங்களும், ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் அரசு தரப்பில் பாதிக்கப்பட்ட நபராக விசாரணை செய்யப்பட்ட **அ.சா.1 ராஜேந்திரன்** என்பவரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக குறிப்பிடப்பட்ட **அ.சா.2 பழனியம்மாள்** என்பவரும் வழக்கு சம்பவம் பற்றி தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இருதரப்பினரும் சமாதானமாக சென்றுவிட்டதாக தெரிவித்ததன் அடிப்படையிலும், பாதிக்கப்பட்ட நபரை அரசு தரப்பு வழக்குக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையிலும், அவரை தவிர அரசு தரப்பில் குறிப்பிடப்பட்ட தனிப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டிய

அவசியம் ஏற்படவில்லை.

8. இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட **அ.சா.1 ராஜேந்திரன்** என்பவர், தனது சாட்சியத்தில் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தன்னுடைய தம்பியுடன் வாய் தகராறு ஏற்பட்டது என்றும், ஆனால் தற்போது தானும் ஆஜர் எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றும், தாங்கள் சமாதானமாக சென்றுவிட்டதால் மற்ற விவரங்களை தெரிவிக்க தனக்கு விருப்பம் இல்லை என்றும், கூட்டத்தில் யார் அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது, புகாரில் உள்ள கைரேகை தன்னுடையது தான். அதிலுள்ள விவரம் தனக்கு தெரியாது என இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி எதிரிகள் தன்னை கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவோ, அடித்து காயம் ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 ராஜேந்திரன் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை.

9. மேலும் இந்த வழக்கில் அ.சா.2 பழனியம்மாள் என்பவர் காயம்பட்ட சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளார். ஆனால் அவர் தொடர்பான மருத்துவ ஆவணங்கள் இந்த வழக்கில் காவல்துறையினரால் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மேற்படி பழனியம்மாள் என்பவரும் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது, இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், யார் யாரை அடித்தார்கள் என்ற விபரமும் தனக்கு தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்குக்கு எதிராக இந்த

நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

10. மேலும் இந்த வழக்கில் மற்றொரு காயம்பட்ட சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 கிருஷ்ணமூர்த்தி என்பவர், மேற்கண்டவாறு இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், யார் யாரை அடித்தார்கள் என்பது தனக்கு தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்குக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மேற்படி விசாரணை செய்யப்பட்ட இருவரும் தங்களுக்கு காயம் ஆனதாகவும், அந்த காயங்களுக்கு எதிரிகள்தான் காரணம் என்றும் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை.

11. **காயங்கள் மற்றும் அதற்கான காரணங்கள்:** இந்த வழக்கில் காயம் பட்ட அ.சா.1 ராஜேந்திரன் என்பவருக்கு மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அ.சா.ஆ.8 காயச்சான்று வழங்கியுள்ளார். மேலும் இந்த வழக்கில் காயம் பட்ட சாட்சியான அ.சா.3 கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்தான விபத்து பதிவேட்ட அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று அ.சா.ஆ.9 காயச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி காயங்களானது இந்த வழக்கின் எதிரிகளால் தான் ஏற்பட்டது என்று மேற்படி பாதிக்கப்பட்ட நபர்கள் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்காததால், மேற்படி மருத்துவ சாட்சியம்

அரசு தரப்பு வழக்கிற்கு எந்த விதத்திலும் பயன்படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. **கண்ணுற்ற மற்றும் பிற சாட்சிகள்** : இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரும் கண்ணுற்ற சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத காரணத்தினாலும், இந்த வழக்கு சம்பவத்தை உறுதி செய்யும் விதமான இரண்டாம் நிலை மற்றும் சூழ்நிலை சாட்சியங்கள் இல்லாததாலும், அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட மற்ற தனிப்பட்ட சாட்சியங்கள் எதுவும் அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க விசாரணை செய்யப்படவில்லை.

13. **இரண்டாம் நிலை மற்றும் சூழ்நிலை சாட்சியங்கள்**: இந்த வழக்கு சம்பவம் குறித்து சிசிடிவி பதிவுகள் புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் போன்ற இரண்டாம் நிலை சாட்சியங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் இந்த வழக்கில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில், இந்த வழக்கு சம்பவத்திற்கு எதிரிகள் தான் காரணம் என்பதை நிரூபிக்கும் விதமாக சூழ்நிலை சாட்சியங்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

14. **புலன்விசாரணை சாட்சியம்:–** இந்த வழக்கில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த காயம்பட்ட ராஜேந்திரன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தது முதற்கொண்டு, இறுதியாக புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது வரை, தற்போது நங்கவள்ளி

காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரியும் **அ.சா.5 கோபி** என்பவர் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரே அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத சூழ்நிலையிலும், இந்த வழக்கில் எதிரிகள் தான் குற்றச்செயல்களை செய்தார்கள் என்பதற்கான இரண்டாம் நிலை மற்றும் சூழ்நிலை சாட்சியங்கள் எதுவும் அரசு தரப்பில் இல்லாத காரணத்தாலும், இந்த வழக்கில் நடைபெற்ற புலன் விசாரணை குறித்து பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும இதே சம்பவம் தொடர்பாக, இந்த வழக்கின் எதிரிகள் தரப்பில் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட எதிர் வழக்காக **C.C. 180 of 2024** என்ற வழக்கிலும் மேற்கண்டவாறு இரு தரப்பிரும் சமாதானமாக சென்று விட்டதாக கூறி சமாதான மனுத்தாக்கல் செய்து இருதரப்பினரும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதவராக சாட்சியம் அளிக்கவில்லை என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

16. மேலும் இந்த வழக்கில் மேற்கணடவாறு தாக்கல் செய்யப்பட்ட சமதான மனு, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் கு.வி.மு.ச. பிரிவு 320–ன் சமாதானமாக போகக்கூடிய குற்றச்சாட்டுகளான இ.த.ச. பிரிவு 323–ஐ பொறுத்து மட்டும் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மற்ற குற்றச்சாட்டுகளைப் பொறுத்து இந்த நீதிமன்றத்தால் **M.P. 4 of 2026** என்ற எண்ணில் கடந்த 23.06.2026–ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## முடிவுரை

ஆகவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையிலும், இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபராக விசாரணை செய்யப்பட்ட **அ.சா.1 ராஜேந்திரன் உள்ளிட்ட காயம்பட்ட சாட்சிகளாக குறிப்பிடப்பட்ட மூன்று நபர்களும்** இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு தங்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும், எதிரிகள் தங்களை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் இந்த நீதிமன்றத்தில் சாட்சி அளிக்காததாலும், மேலும் அரசு தரப்பு தனது வழக்கை நிரூபிக்கும் விதமாக போதிய இரண்டாம் நிலை மற்றும் சூழ்நிலை சாட்சியங்கள் எதுவும் இல்லாத காரணத்தாலும், இந்த வழக்கில் சம்பவத்தின் போது எதிரிகள் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களை, தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தி, **இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 294(b), 323, 324, 326** ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல்கள் செய்துள்ளார்கள் என்று அரசு தரப்பு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் சந்தேகத்துக்கிடமிருந்து நிரூபணம் செய்யவில்லை என தீர்மானித்து இந்த வழக்கில் தீர்வு அளிக்கப்பட வேண்டிய வினாவிற்கு அரசு தரப்பிற்கு எதிராக இந்த நீதிமன்றம் விடை அளிக்கிறது.

முடிவாக இந்த வழக்கின் **1ம் எதிரி தங்கம், 2ம் எதிரி ராஜேஷ்,** ஆகியோர்கள் **இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 326** ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 271(1)–ன்** கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.



N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்
17.07.2026

**இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் ஜூலை மாதம் 17-ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN
Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.17 19:23:47 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ. சா. 1 | ராஜேந்திரன் | புகார்தாரர் |
| அ. சா. 2 | பழனியம்மாள் | பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ. சா. 3 | கிருஷ்ணமூர்த்தி | பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ. சா. 4 | சுதாகர் | பார்வைமகசர் சாட்சி |
| அ. சா. 5 | பிரபு | பார்வைமகசர் சாட்சி |
| அ. சா. 6 | திரு.கோபி | கூடுதல் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.1 | புகாரிலுள்ள கைரேகை | அ.சா.1 |
| அ. சா.ஆ.2 | பார்வைமகசரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் | அ.சா.4 |
| அ. சா. ஆ.3 | பார்வைமகசரில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் | அ.சா.5 |
| அ. சா. ஆ.4 | புகார் | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.5 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.6 | பார்வைமகசர் | அ.சா.6 |
| அ. சா. ஆ.7 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ. சா. ஆ.8 | விபத்து பதிவேடு | அ.சா.6 |
| அ. சா. ஆ.9 | காயச் சான்றிதழ் | அ.சா.6 |
| அ. சா. ஆ.10 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.11 | விபத்து பதிவேட்டு அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.12 | காயச்சான்றிதழ் | அ.சா.6 |
| அ. சா. ஆ.13 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா. ஆ.14 | எழுத்துபூர்வமான தகவல் அறிக்கை | அ.சா.6 |

**அரசு தரப்பு சான்று பொருள் :—** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள்:—** இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:—**இல்லை

**எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்:—** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.17 19:23:32 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1 ,மேட்டூர்.**

**குறிப்பு**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**நகல்:—** மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.



**N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L.,**
நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்
17.07.2026